வேலையின்மை எனப்படும். எடுத்துக்காட்டாக, அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் காரணமாக மிகவும் பிற்படுத்தப்பட்ட ஜாதியினருக்கு வேலை கிடைக்கின்றது. முற்படுத்தப்பட்ட ஜாதியினர் வேலை கிடைக்காமல் உள்ளனர்.

## 4. தொன்மைவாதிகளின் வேலைக் கோட்பாடு (Classical Theory of Employment)

பொதுவாக 1776–ல் ஆடம்ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' என்ற நூல் வெளிவந்ததிலிருந்து ஏறத்தாழ 150 ஆண்டுகளில் டேவிட் ரிக்கார்டோ, ஜே.எஸ்.மில், மால்தஸ், சீனியர், பிகு, ஜே.பி.சே ஆகியோர் உருவாக்கிய கோட்பாட்டை தொன்மைப் பொருளியல் கோட்பாடு என்கிறோம். வேலைவாய்ப்புக் கோட்பாடு, சேமிப்பு முதலீடு சமநிலை, சேயின் அங்காடி விதி, பிகுவின் விளைவு ஆகியவை தொன்மைப் பொருளியல் கோட்பாட்டில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

### தொன்மை வேலைக் கோட்பாட்டின் எடுகோள்கள் :

தொன்மைவாதிகளின் வேலைக் கோட்பாடானது பின்வரும் எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது :

### 1. முழுவேலை நிலை (*Full Employment*) :

உழைப்பு மற்றும் இதர உற்பத்திச்சாதனங்கள் எப்போதும் முழுவேலை நிலையில் இருக்கும். முழு வேலைநிலை என்பது இயல்பு நிலையாகும். வேலையின்மை என்பது அசாதாரண நிகழ்ச்சி, தற்காலிகமானது.

### 2. தலையிடாக் கொள்கை (*Full Employment*) :

பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது. அப்போது தான் அங்காடி அமைப்பானது திறம்பட செயல்பட்டு நுகர்வோர் உச்ச அளவு நன்மை பெறுவார்கள். பொருளாதாரம் தானே

N - வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை

Y - நாட்டு வருமானம்

q - நாட்டு வருவாயில் கூலியின் விகிதம்


W - பணக்கூலி விகிதம்

மற்றவை மாறாமல் இருக்கும்போது, கூலி குறைவதால் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கூடும் என்பதை இச்சமன்பாடு காட்டுகின்றது. பிகுவின் கருத்துப்படி, பணக்கூலியைக் குறைப்பதன் மூலம் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட முடியும். தன் விருப்பமற்ற வேலையின்மைக்குக் காரணம் அதிக கூலியாகும். எனவே கூலியை குறைப்பதன் மூலம் வேலையின்மையைப் போக்க முடியும் என பிகு கருதினார்.

வேலையின்மை நிலவும்போது, தொழிலாளர்கள் குறைந்த கூலியை பெற இசையும்போது விலைகள் குறைகின்றன. இதன் விளைவாக மக்களின் உண்மை வருமானம் கூடுவதால், பொருட்களுக்கு தேவை அதிகரித்து, உற்பத்தி பெருகி பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகின்றது. இதனை பிகு விளைவு (Pigou Effect) என்கிறோம். பிகுவின் கருத்துப்படி பணக்கூலி குறைப்பானது முழுவேலை நிலையை அடைய வழியாகும். எனவே, வேலையின்மையைப் போக்க கூலிக் குறைப்பை பிகு வலியுறுத்துகின்றார். இவ்வாறு தொன்மைப் பொருளியல் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் கூலிக்குறைப்பு (Wage cut) முக்கிய இடம் பெறுகின்றது.

பின்வரும் வரைபடத்தின் மூலம் பிகுவின் வேலைக் கோட்பாட்டையும், பிகு விளைவையும் விளக்கலாம்.

பின்வரும் வரைபடத்தில் SL என்பது உழைப்பின் அளிப்பு கோடாகும். DL என்பது உழைப்பின் தேவைக் கோடாகும். இவ்விரு கோடுகளும் வெட்டுகின்ற E என்ற புள்ளியானது முழுவேலை நிலைப் புள்ளியாகும். கூலி $OW_1$ ஆக இருக்கும்போது உழைப்பின் அளிப்பு ($W_1B$) உழைப்பின் தேவையை ($W_1A$) விட அதிகமாக உள்ளது. எனவே பொருளாதாரத்தில் AB அளவு வேலையின்மை உள்ளது. இந்த வேலையின்மைக்குக் காரணம் கூலியின் அளவு அதிகமாக இருப்பதாகும். கூலியானது OW ஆக




வரைபடத்தில் SS என்பது சேமிப்புக் கோடாகும். II என்பது முதலீட்டுக்கோடாகும். வட்டிவீதம் கூடக்கூட சேமிப்பு கூடுகின்றது. எனவே SS கோடு மேல்நோக்கிச் செல்கின்றது. வட்டிவீதம் குறையக்குறைய முதலீடு அதிகரிக்கின்றது. எனவே II கோடு கீழ்நோக்கி சரிந்து செல்கின்றது. துவக்கத்தில் வட்டிவீதம் $OR^1$ ஆக இருக்கும்போது சேமிப்பானது ($R^1H$) முதலீட்டை ($R^1G$) விட அதிகமாக இருப்பதால் வட்டிவீதம் படிப்படியாகக் குறைந்து OR என்ற சமநிலை வட்டிவீதத்தை அடைகின்றது. மாறாக வட்டிவீதம் $OR^2$ ஆக இருக்கும்போது முதலீடானது ($R^2L$) சேமிப்பை ($R^2K$) விட அதிகமாக இருப்பதால் படிப்படியாக வட்டிவீதம் குறைந்து OR என்ற சமநிலை வட்டிவீதத்தை அடைகின்றது. இவ்வாறு வட்டிவீத மாற்றங்கள் சேமிப்பு முதலீட்டில் சமநிலையைக் கொண்டு வருகின்றன. சேமிப்புக்கோடும் (SS) முதலீட்டுக்கோடும் (II) சந்திக்கின்ற E என்ற சமநிலைப்புள்ளியில் சேமிப்பும், முதலீடும் சமப்படுகின்றன.

## சேயின் அங்காடி விதி (Say's Law of Markets) :

பொருளாதாரத்தில் எப்போதும் சாதனங்கள் முழுவேலை நிலையில் இருக்கும் என்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்து சேயின் அங்காடி விதியின் அடிப்படையில் அமைந்துள்ளது. தொன்மைவாதிகளின் வேலைக்கோட்பாட்டின் மையமாக விளங்குவது சேயின் அங்காடி விதியாகும். "அளிப்பு அதனுடைய தேவையை உருவாக்குகிறது" என்பது J.B. சே அவர்களின் அங்காடி விதியாகும். அதாவது உற்பத்தியே

பண்டங்களுக்கு அங்காடியை உருவாக்கிவிடும். சேயின் அங்காடி விதிப்படி, ஒவ்வொரு உற்பத்தியும் அதே அளவு வருமானத்தை (வாரம், கூலி, வட்டி, இலாபம்) உருவாக்குகிறது. எனவே உற்பத்தியின் மதிப்பிற்கு சமமான வாங்கும் சக்தியைக் கொண்டு அப்பண்டம் முழுவதும் வாங்கப்படுவதால் உற்பத்தியாகின்ற பண்டங்கள் எல்லாம் விற்பனையாகின்றது.

எடுகோள்கள் :

சேயின் அங்காடி விதி பின்வரும் எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளது :

1. அரசின் தலையீடு இல்லை.
2. அங்காடிப் பொருளாதாரத்தில் விலை என்ற கருவியானது மக்கட் தொகைப் பெருக்கத்தையும், முதலாக்கத்தையும் தூண்டுகிறது.
3. அங்காடியின் அளவு விரிவடையும் தன்மை உடையது.
4. வட்டிவீத நெகிழ்ச்சியினால் சேமிப்பும், முதலீடும் சமநிலையில் இருக்கும்.
5. பிறநாடுகளுடன் வணிகத் தொடர்பில்லை (மூடிய பொருளாதாரம்).
6. வருமானம் அனைத்தும் செலவிடப்படுகின்றது (பதுக்குதல் இல்லை).
7. பணம் இடையீட்டுக் கருவியாக மட்டும் செயல்படுகின்றது.
8. அங்காடியில் நிறைவுப்போட்டி நிலவுகிறது.
9. விலைகள், கூலிகள் மாறும் தன்மையுடையவை.
10. பொருளாதாரம் நீண்டகால சமநிலையில் இருக்கும்.

விளக்கம் :

சேயின் அங்காடி விதியை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ரூ. 1000 கோடி பெறுமான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும்போது ரூ. 1000 கோடி பெறுமான உற்பத்திக் காரணிகளின் வருமானம் (வாரம், கூலி, வட்டி, இலாபம்) உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக ...

5) அளிப்பு கூடும்போது தேவையும் கூடுவதால் அங்காடியில் பொருள் தேக்கம் இல்லை.

6) வட்டிவீத நெகிழ்ச்சியானது, சேமிப்பிற்கும், முதலீட்டிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துகிறது.

7) பணம் ஒரு திரையாக (இடையீட்டு கருவியாக) செயல்படுகின்றது.

8) ஒவ்வொருவரும் பிறர் நலனில் அக்கறை கொண்டுள்ளனர். எனவே, உற்பத்தியாளர், நுகர்வோர் என பிரிப்பது அறிவற்றதாகும்.

9) சேயின் அங்காடி விதி சுதந்திர வணிகத்தை ஆதரிக்கின்றது. நாம் பிற நாட்டுப் பொருட்களை வாங்கும்போது அவர்கள் நமது பொருட்களை வாங்குவார்கள்.

10) நீண்ட காலத்தில், முதலாளித்துவ பொருளாதாரமானது தானாகவே முழு வேலைவாய்ப்புச் சமநிலையை அடையும்.

## பிகுவின் முழுவேலை நிலைக் கருத்து
### (பிகு விளைவு)

சேயின் அங்காடி விதியை பிகு தனது முழுவேலை நிலை கருத்து மூலம் மேம்படுத்தி தொன்மைப் பொருளாதார வேலைநிலைக் கோட்பாட்டிற்கு இறுதி வடிவம் தந்துள்ளார். தொழிலாளர்கள் தங்களது இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கு சமமான கூலியைப் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொள்ளும்போது உழைப்பு அங்காடியில் வேலையின்மை ஏற்படாது என பிகு குறிப்பிடுகிறார். ஆனால் உழைப்பிற்கான தேவைக்குத் தகுந்தவாறு கூலிக் கொள்கையானது மாறாததால் வேலையின்மை ஏற்படுகின்றது என பிகு கருதுகின்றார். அதாவது கூலியானது நெகிழ்ச்சியற்று இருப்பதால் வேலையின்மை ஏற்படுகின்றது. அரசு அல்லது தொழிற்சங்கங்களின் தலையீட்டின் காரணமாக கூலியில் நெகிழ்ச்சியற்ற தன்மை உருவாகிறது.

பிகுவின் வேலைக் கோட்பாட்டை பின்வரும் சூத்திரத்தின் மூலம் விளக்கலாம் :

$$N = \frac{qY}{W}$$

உற்பத்தி காரணிகளின் வருவாயும் அதே அளவு கூடுவதால் தேவையும் அதிகரிக்கும். எனவே, "அளிப்பு அதன் தேவையை உருவாக்குகிறது". இதனால் மிகையான உற்பத்தி, வேலையின்மை, பொருட்தேக்கம் ஏற்படாது. சுருங்கக்கூறின்,

$$\Delta O = \Delta Y = \Delta E$$

உற்பத்தி அதிகரிப்பு = வருமான அதிகரிப்பு = நுகர்ச்சி செலவு அதிகரிப்பு

ரூ. 1000 கோடி பெறுமான பொருளின் உற்பத்தி → உற்பத்திக் காரணிகளின் வருமானம் ரூ. 1000 கோடி

↓ ↓

பண்டங்களின் அளிப்பு ரூ. 1000 கோடி = ரூ. 1000 கோடி பெறுமான பொருளுக்கான தேவை

உற்பத்தியாளர்களின் தவறான மதிப்பீட்டின் காரணமாக ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் தேவையானது தற்காலிகமாக அளிப்பைவிட அதிகமாக இருக்கலாம் என்பதை சே ஒத்துக்கொண்டாலும், பொதுவாக எல்லாப் பண்டங்களின் உற்பத்தியையும் சேர்த்துப் பார்க்கும்போது பொதுவான மிகை உற்பத்தி அல்லது பொதுவான வேலையின்மை ஏற்படாது என உறுதியாக அவர் குறிப்பிடுகின்றார்.


## சேயின் அங்காடி விதியின் உட்கருத்துக்கள் (Implication) :

1) அளிப்பு தேவையை உருவாக்குவதால் பொருளாதாரத்தில் மிகையான உற்பத்தி அல்லது வேலையின்மை இல்லை. (இக்கருத்தின் அடிப்படையில் தொன்மைவாதிகள் முழு வேலைநிலையை ஏற்றுக் கொண்டார்கள்).

2) பொருளாதாரத்தில் வேலையில்லாதவர்கள் இருக்கும் வரை, முழுவேலை நிலையை அடையும் வரை அவர்களை உற்பத்தியில் பயன்படுத்துவது இலாபகரமானது.

3) அங்காடி விரிவடைவது ஆதாயமாக இருக்கும். ஏனெனில் தேவை கூடி விலையும் கூடும்.

4) அங்காடியானது (பொருளாதாரமானது) தானாக சரி செய்து கொள்ளும் இயல்பு இருப்பதால் அரசின் தலையீடு தேவையில்லை. சேயின் அங்காடி விதி தலையிடா கொள்கைக்கு ஆதரவு தருகின்றது.





வேலைவாய்ப்பு

அதிக தொழிலாளர்களை வேலையில் பயன்படுத்தும்போது அவர்களின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைவதை கீழ்நோக்கி சரிந்து செல்லும் MPL கோடு காட்டுகின்றது. தொழிலாளர்கள் அவர்களது இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கு சமமான கூலியைப் பெறும்போது, அதாவது கூலிக்குறைப்பை ஏற்றுக்கொள்ளும்போது முழு வேலைநிலை ஏற்படுகின்றது.

திறனாய்வு :

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக இருந்த அங்காடி விதியை குறை கூறியதுடன் நில்லாமல், கீன்ஸ் புதிய வேலைக் கோட்பாட்டை உருவாக்கி சேயின் விதியை புறக்கணிக்கும்படி செய்துவிட்டார். தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் வேலைக் கோட்பாட்டில் காணப்படும் குறைகள் பின்வருமாறு :




வரைபடத்தில் SL என்பது உழைப்பின் அளிப்புக் கோடாகும். DL என்பது உழைப்பின் தேவைக் கோடாகும். கூலி விகிதம் முதலில் $OW_1$ ஆக இருப்பதாக கொள்வோம். இந்நிலையில் உழைப்பின் அளிப்பானது ($W_1B$) உழைப்பின் தேவையை ($W_1A$) விட அதிகமாக இருக்கின்றது. எனவே கூலி விகிதமானது படிப்படியாகக் குறைந்து OW என்ற சமநிலை கூலி விகிதத்தை அடைகின்றது. மாறாக, கூலி விகிதம் $OW_2$ ஆக இருக்கும்போது உழைப்பின் தேவை ($W_2D$) உழைப்பின் அளிப்பை ($W_2C$) விட அதிகமாக இருப்பதால், கூலியானது படிப்படியாக அதிகரித்து OW என்ற சமநிலை கூலி விகிதத்தை அடைகின்றது. எனவே அங்காடியில் நிலவும் கூலி விகிதமானது சமநிலை கூலி விகிதத்திற்கு (OW) அதிகமாக ($OW_1$) அல்லது குறைவாக ($OW_2$) இருந்தால் முழுவேலைநிலை (OM) அடையும்வரை கூலிமாற்றம் நிகழும். இவ்வாறு கூலிவீத மாற்றங்கள் உழைப்பின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையைக் கொண்டு வருகின்றன.

## சேமிப்பு முதலீடு சமநிலை :

தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி வட்டிவீத நெகிழ்ச்சியானது சேமிப்பு, முதலீட்டில் சமநிலையைக் கொண்டு வருகின்றது. சேமிப்பு முதலீட்டைவிட அதிகமாக இருக்கும்போது வட்டிவீதம் குறைகின்றது. இதனால் முதலீடு அதிகரித்து இறுதியில் சேமிப்புடன் சமப்படுகின்றது. மாறாக, முதலீடு சேமிப்பைவிட அதிகமாக இருக்கும்போது வட்டி வீதம் அதிகரிக்கின்றது. இதனால் முதலீடு குறைந்து இறுதியில் சேமிப்புடன் சமப்படுகிறது.

## தொன்மைவாதிகளின் வேலைவாய்ப்புக் கோட்பாடு :

தொன்மைவாதிகளின் கோட்பாட்டின்படி வேலையைத் தேடுபவர்கள் (உழைப்பாளர்கள்), வேலை தருபவர்கள் (உற்பத்தியாளர்கள்) ஆகியோர் ஒன்றுபடும் நிலையில் வேலை வாய்ப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது உழைப்பின் அளிப்பும், உழைப்பின் தேவையும் வேலையின் அளவை நிர்ணயிக்கின்றன.

## உழைப்பின் அளிப்பு :

தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி, கூலி வீதத்திற்கும், உழைப்பின் அளிப்பிற்கும் நேரடியான தொடர்பு உண்டு. கூலியானது தொழிலாளர்களின் பராமரிப்பு மட்டத்தைவிட அதிகரிக்கும் போது மக்கள்தொகை அதிகரித்து, உழைப்பின் அளிப்பு அதிகரிக்கின்றது. மாறாக, கூலியானது தொழிலாளர்களின் பராமரிப்பு மட்டத்தைவிட குறைவாக இருக்கும்போது மக்கள்தொகை குறைந்து உழைப்பின் அளிப்பும் குறைகின்றது.

## உழைப்பின் தேவை :

உழைப்பின் தேவையானது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தி திறனைப் பொறுத்ததாகும். தொன்மைவாதிகளின் கருத்துப்படி, கூலி வீதத்திற்கும், உழைப்பின் தேவைக்கும் தலைகீழான தொடர்பு உண்டு. கூலியானது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறனைவிட குறைவாக இருக்கும்போது உழைப்பின் தேவை கூடும். மாறாக, கூலியனாது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறனைவிட அதிகமாக இருக்கும் போது உழைப்பின் தேவை குறையும்.

## வேலையின் அளவு நிர்ணயம் :

தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி உழைப்பின் அளிப்பும், உழைப்பின் தேவையும் சமப்படும் புள்ளியில் வேலை நிலையானது நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது உழைப்பின் அளிப்புக்கோடும் (SL) உழைப்பின் தேவைக்கோடும் (DL) சந்திக்கின்ற புள்ளியில் (E) வேலைநிலையானது நிர்ணயிக்கப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடம் விளக்குகிறது :

அடிப்படையாகும். உற்பத்திக் காரணிகளின் வருவாய் அனைத்தும் செலவிடப்படுவதால் மிகையான உற்பத்தி மற்றும் வேலையின்மை ஏற்படாது.

4. வட்டிவீத நெகிழ்ச்சி :

வட்டிவீத நெகிழ்ச்சியானது சேமிப்பையும், முதலீட்டையும் சமப்படுத்துகின்றது.

5. கூலி விகித நெகிழ்ச்சி :

கூலி விகித நெகிழ்ச்சியானது உழைப்பின் தேவைக்கும், உழைப்பின் அளிப்பிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துகின்றது.

6. மாற்றமின்மை :

தொழில் நுணுக்கம் மற்றும் மக்கள்தொகை மாறாமல் இருக்கிறது.

7. கூலிக் குறைப்பு :

அரசு மற்றும் தொழிற்சங்கங்களின் குறுக்கீட்டின் காரணமாக தோன்றும் வேலையின்மையை கூலிக்குறைப்பானது போக்குகின்றது.

8. பணத்தின் பணி :

பணம் ஒரு இடையீட்டுக் கருவியாக மட்டும் செயல்படுகின்றது.

9. நிறைவுப் போட்டி :

பண்டம் மற்றும் காரணி அங்காடியில் நிறைவுப்போட்டி நிலவுகின்றது. விற்பனையாளர்களிடம் போட்டி நிலவுவதால் இலாப விகிதம் குறைந்துகொண்டு வருகின்றது.

10. தேக்க நிலை :

குறைந்து செல்லும் இலாப விகிதம் இறுதியில் தேக்க நிலைக்கு கொண்டு செல்கின்றது.